# **DEPOSITION OF WITNESS**

## **In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 96/2025**

**Prosecution witness : அ.சா. 10** **Date : 18.11.2025.**

| **Name : ஆறுமுகம்** | **Taluk :** |
|---|---|
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் மேட்டூர் ஆர்எஸ்ஸில் குடியிருந்து பொட்டனேரி பெட்ரோல் பங்கில் வேலை செய்கிறேன். கடந்த 2023ம் வருடம் மதிய நேரத்தில் இரு சக்கர வாகனத்தில் சென்ற போது லாரி மோதி விபத்து ஏற்பட்டதாக சொன்னார்கள். வேறு ஒன்றும் தெரியாது. போலீசார் என்னை விசாரித்தனர்.

**சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி, அரசு தரப்பில் கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

2) கடந்த 15.10.2023ம் தேதி மதியம் 3.15 மணிக்கு TN 38 AB 8645 பஜாஜ் சிடி 100 என்ற இரு சக்கர வாகனத்தில் மேட்டூர் சாலையில் பொட்டனேரி ஆடு ஆராய்ச்சி நிலையம் முன்பாக HP பெட்ரோல் பங்கிற்கு பெட்ரோல் போடுவதற்காக இரு சக்கர வாகனத்தில் வந்த நபர் சிக்னல் போட்டு ரோட்டை கடந்து வந்தார் என்றால் எனக்கு தெரியாது. அப்போது TN 52 X 0360 டேங்கர் லாரி வேகமாக வந்து இரு சக்கர வாகனத்தின் மீது மோதியதை பார்த்தேனா என்றால் இல்லை.

சம்பவத்தை நேரில் பார்த்து விட்டு தற்பொழுது எதிரிக்கு சாதகமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை– இல்லை.

**ஒம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**